அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in

அ.எண்.217/2015
தேதி.6.9.2015

காவிரியின் குறுக்கே இருக்கிற அணைகளில் தண்ணீர் தேக்குவதால்

# தமிழகத்திற்கு தண்ணீர் தர முடியவில்லை
# கர்நாடக அரசின் பிடிவாதத்தை
# மத்திய அரசு கண்டிக்க வேண்டும்
# ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை.

காவிரியின் மூலம் கர்நாடக அரசு கொடுக்க வேண்டிய தண்ணீரை நம்பி தமிழக காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு தயாராகிவருகிறார்கள். இந்த நிலையில் காவிரியில் போதிய நீர் இருப்பு இல்லை என பொய்யான ஒரு தகவலைத் தெரிவித்து தமிழகத்திற்கு தண்ணீர் தரமுடியாது என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

இந்த ஆண்டில் இதுவரை நமக்குத் தந்திருக்க வேண்டிய தண்ணீரில் இன்னும் ஏறத்தாழ 27 டி.எம்.சி தண்ணீர் மீதம் இருக்கிறது. அதை முழுவதும் பெற்றால்தான் சம்பா சாகுபடிக்கு தேவையான தண்ணீரை வழங்குவதில் ஓரளவு சமாளிக்க முடியும்.

மேகதாது அணை

கர்நாடகா ஏற்கனவே ஹேமாவதி, ஹாரங்கி, கபினி, யாகாச்சி, ஸ்வர்ணவதி, போன்ற 5 அணைகளைக் காவிரியின் குறுக்கே கட்டி 70 டி.எம்.சி தண்ணீரை தேக்கி வைத்துக்கொண்டார்கள். இப்போதிருக்கிற நிலையை மட்டும் கணக்கில் கொண்டு பார்த்தாலும், காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பின்படி கர்நாடகா போதிய தண்ணீரை தரமுடியவில்லை. இந்த நிலையில் மேகதாது, ராசிமணல் ஆகிய

இடங்களில் மேலும் இரண்டு அணைகள் கட்டப்பட்டால் தமிழகம் முற்றிலும் வஞ்சிக்கப்படும் என்பது உறுதி.

மத்திய அரசு காலதாமதம்

காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தால் தான் இதுபோன்ற பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படும் என்பது உறுதி என்ற நிலையில் மத்திய அரசு மேலும் காலம் தாழ்த்துவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். உடனடியாக மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட முன்வரவேண்டும்.

காவிரி டெல்டா பகுதி சம்பா சாகுபடி விவசாயத்தை காப்பாற்ற உடனடியாக தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை உடனே ஏடுத்திட வேண்டும் என சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்